பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு
THE EELANADU

வருஷம் 30 இதழ் 39 நாள் 5 இலக்கம் 119

வாரத்தொறும் திங்கட்கிழமை 12-6-78

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1978-6-12
PERIODICALS DIVISION
LIBRARY

வளாகங்கள் இனிமேல் அக்டோபரில் திறக்கும்

(தொழுப்பு)

'சகல பல்கலைக் கழக வளாகங்களும் இனிமேல் புதிய கல்வியாண்டுக்காக ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதமே திறக்கப்படும்' இவ்வாறு கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஸ்டாக்லி கல்பகே கூறினார். எனினும் பேராதனை தொழுப்பு மருத்துவ பீடக் கட்டு இம்முறை விதிவிலக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் வைத்திருந்தால்

வழக்கு விசாரணை முடிவடையும்வரை விளக்கமறியல்!

(தொழுப்பு)

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் வைத்திருப்போர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

வைக்குண்டுகள், லைசென்ஸ் இல்லாத துப்பாக்கிகள், ஏனைய பயங்கர ஆயுதங்கள் ஆகியவற்றை வைத்திருந்து இக்குற்றச் சட்டத்தின் மீது பொலிசாரால் கைதுசெய்யப்படுபவர்கள், அவர்கள் மீதான வழக்கு விசாரணைகள் முடியும் வரை தடுப்புக்காவலில் வைக்கப்படுவார்கள்.

சட்டமா அதிபர், நீதிபதிகள் பொலிஸ் உயர் அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய மகாநாடு ஒன்றில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திட்டமிட்டுக் குற்றச்செயல் புரிவோர் மீது குற்றவியல் சட்டத்தின்கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

புனித சின்னங்கள் 17-ல் யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

கபிலவஸ்து புனிதச் சின்னங்கள் இவ்வாரம் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

17ம் திகதி சனிக்கிழமை யாழ். வரும் இப் புனிதச் சின்னங்கள் 18ம் திகதி நண்பகல் வரை யாழ்ப்பாணத்தில் பொதுமக்களின் தரிசனத்துக்காக யாழ்ப்பாணம் ஸ்ரீநாக விகாரையில் வைக்கப்படும்

சனிக்கிழமை பகல் 11 மணியளவில், பருத்தித்துறை வீதி புகையிரதக் கடவைக்கு அருகில் விசேடமாக அமைக்கப்பட்டிருக்கும் அரங்கில் வைத்து யாழ்ப்பாணம் எம். பி. திரு. வே. யோகேஸ்வரன் இப் புனிதச் சின்னங்களை யாழ். அரசாங்க அதிபர் திரு. எவன் பெர்னாண்டோ வசம் ஒப்படைப்பார். இதனைத் தொடர்ந்து புனிதச் சின்னங்கள் பவனியாக ஸ்ரீநாகவிகாரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரதான குருவிடம் ஒப்படைக்கப்படும்.

17-ம் திகதி பகல் 11 மணி முதல் 18-ம் திகதி பகல் 12-30 மணிவரை இப்புனித சின்னங்கள் யாழ். ஸ்ரீநாக விகாரையில் பொதுமக்கள் தரிசனத்துக்கு வைக்கப்படும்.

17-ம் திகதி கலாச்சார அமைச்சர் திரு. ஈ. எல். பி. ஹுருல்லேயும், 18-ம் திகதி கல்வி அமைச்சர் திரு. நிஸங்க விஜேயரத்னவும் கபிலவஸ்து புனித சின்னங்களை இக்கு தரிசிப்பார்கள்.

நேற்று மாலை ஸ்ரீநாகவிகாரையில் யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் இது சம்பந்தமான ஒரு ஆலோசனைக்கூட்

(6-ம் பக்கம் பார்க்க)

கஞ்சா பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் வண்டியை நிறுத்திச் சோதனையிட்ட பொலிசார் பிரயாணி ஒருவரிடமிருந்து 165 கிறேயின் கஞ்சாவைக்கைப்பற்றினர். பொலிசார் குறித்த பிரயாணியை

(6-ம் பக்கம் பார்க்க)

சீன - அமெரிக்க உறவு: 1979-ல் பெரும் மாற்றம்

வாஷிங்டன், ஜூன் 11

அடுத்த ஆண்டு ஜனவரியில் சீனாவை அமெரிக்கா உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கலாம் என்று சீன-அமெரிக்க கல்விமான் ஒருவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சீன- அமெரிக்க கல்விமான் திரு. ஜேம்ஸ் லியூ. அமெரிக்க தேசிய பத்தோபஸ்து சபையுடன் நெருங்கிய தொடர்புடையவர்.

அமெரிக்க-சீன உறவில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன என்று தெரிவித்த இவர், அடுத்த ஆண்டு பெப்ரவரியில் சீனாவை அமெரிக்கா உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கும் என்று ஹேஷ்வம் தெரிவித்துள்ளார்.

"அபிவிருத்தித் திட்டங்களில்

வாலிபர்க்கு வேலை வாய்ப்பு: பொறுத்திருந்து பார்ப்போம்

— மனிப்பாய் எம். பி.

(அரியாலை)

"வாலிபர்களின் தகுதிக்குத் தகுந்த வேலை தொழில்வங்கிமூலம் கிடைக்குமென எதிர்பார்க்கமுடியாது. அரசாங்கம் ஆரம்பித்திருக்கும் மகாவலிகங்கை திருப்புத்திட்டம், வரித்தலவை அமைப்புத் திட்டம் என்பவற்றில் அநேகருக்கு வேலை வாய்ப்புக்கள் அளிக்கப்படுமென்று அரசாங்கம் கூறுகிறது. மொத்தத்தில் எத்தனை தமிழ்வாலிபர்களுக்கு இத்திட்டங்களில் வேலைவாய்ப்புக் கிடைக்குமென்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். எனது தொகுதியில் வாழும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கே வேலை வாய்ப்புக்களில் முதலிடம் அளிக்க நான் முயற்சி செய்து வருகிறேன்".

இவ்வாறு மனிப்பாய்த் தொகுதிக்கான அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம், சுன்னாகம் ஸ்ரீமான் கதிரேசன் வாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற அமரர் யோகேஸ்போலின் 8 வது நினைவுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அகில இலங்கை தொழிலாளர் தமிழர் இயக்க மானிப்பாய்க்கிளையின் சார்பில் சட்டத்தரணி பூ. சதாசிவராஜாவின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. தருமலிங்கம் தொடர்ந்து பேசுகையில், "ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பில் அவர்களின்விடுதலைக்காக உரிமைக்குரல் எழுப்பிய அமரர் யோகேஸ்போலின் நினைவு என்றும் வாழாது தனது இறுதிக் காலம்வரை பிறருக்காக வாழ்ந்து செயலாற்றினார். ஏகாதிபத்திய ஆதிக்கத்தினின்றும் நாடு விடுதலையெற வேண்டுமென்று நாடு முழுவதும் கருத்துக்கள் பரவியநேரத்தில் வடக்கில் மனிதஉரிமையே அற்ற நிலையில் சமூகமும், சமயோசனம் மறுக்கப்பட்ட மக்களின் தலைவராகவிளங்கியதுடன், அக்கோரிக்கைகளை வென்றெடுக்கத் தன்னை அர்ப்பணித்த வீரராகச் செயல்பட்டார். இவரது சிறப்புமிக்க சேவையை இந்நாட்டில் வாழும் ஒடுக்கப்பட்ட-உரிமை குறைந்த மக்கள் என்றும் மறக்க முடியாது" என்று குறிப்பிட்டார். (4)

1980 முதல் தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு - எம்.ஜி.ஆர். அறிவிப்பு

சென்னை, ஜூன் 11

1980-ல் தமிழ் நாட்டில் பூரண மது விலக்கு அமுலில் இருக்குமென்று தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று பத்திரிகை நிருபர்களுக்கு முதலமைச்சர் அளித்த பேட்டியில், அடுத்த இரண்டு ஆண்டுகளில் மதுவிலக்கை வெற்றிகரமாக- பூரணமாக தமிழ் நாட்டில் நிறைவேற்றதாம் உறுதி கொண்டிருப்பதாகவும், 1980-ல் இத்திட்டம் முழுவதுமே சாத்தியமாகுமென்று கருதுவதாகவும் வெளியிட்டார்.

மும்மொழித் திட்டம்

காஷ்மீர் முதலமைச்சர் ஷேக் அப்துல்லாவின் மும்மொழித்திட்டம் பற்றி முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில் ஷேக் அப்துல்லா கூறும் மும்மொழித்திட்டத்தை தமிழ் நாட்டுமக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று தெரிவித்தார்.

மாநிலங்களுக்கிடையே ஹிந்தி இணைப்பு மொழியாகவும் மத்திய அரசு, மாநில அரசு தொடர்புகள் ஆங்கிலத்

(6ம் பக்கம் பார்க்க)

வர்விளம்பரம்

தேவை

சோடா பெட்டிகள் ஏற்றி இறக்கக்கூடிய கூலி ஆட்களும் (Labourers) விற்பனையாளர்களும் (Salesmen) தேவை. நேரில்வரவும். பிக்னிவார் விலாஸ், 31, மாவிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 9526

வரவில் சோடா வியாபாரம் செய்வதற்கு அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். ஆ. ச. சகோதரப்பிள்ளை நிறுவனம், 162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9551

விற்பனைக்கு

குறுகிய காலத்தில் அதிக பயன்தரக்கூடிய நல்ல இன செவ்வினநீர்க்கன்றுகள் விற்பனைக்குண்டு. மிக்கல்லைறி— யாழ்ப்பாணம். 9515

காணவில்லை

யாழ்ப்பாணம் 4ம் குறுக்குத் தெரு 43ம் இலக்க வீட்டில் வேலைக்கு இருந்த கோலையைச் சேர்ந்த ராமசாமியின் மகள் ராதா என்ற சுமார் 12 வயதான பெண்ணை 8-6-78 பிற்பகல் 2-00 மணி முதல் காணவில்லை. உயரம் 4 அடி. தகவல் தெரிந்தவர்கள் மேற்காட்டிய விலாசத்திற்கு தயவு செய்து தகவல் தரவும். 9553

நாரந்தனை கிராமாட்சி மன்றம்

கேள்வி விளம்பரம்

நாரந்தனை கிராமாட்சி மன்ற விசேட ஆணையாளரால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்காணும் வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 27-6-78-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களை கிராமாட்சி மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலை விபரம்

1. முருகமூர்த்தி கோவில் கண்ணகை அம்மன் கோவில் வீதி அமைப்பு வேலை.

செல்லையா கணேஷ்,
விசேட ஆணையாளர்,
கிராமாட்சி மன்றம்,
நாரந்தனை.

கிராமாட்சி மன்ற அலுவலகம்,
நாரந்தனை,
ஊர்காவற்றுறை.
12-6-78. 9529

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

"Red Heart" Automatic Irons
"றெட் காட் எலக்ரிக் அயன்"

- நீண்டகாலப் பாவனைக்கு உகந்தது
- அனேகரின் பாவனையில் உள்ளது
- மக்களால் பெரிதும் விரும்பப்படுவது
- ஆறு இருத்தல் எடையுள்ளது

மிகக்குறைந்த விலையில் விற்பனைக்கு வந்துள்ளது
இன்னும் அனேகமான நவீன மின்சார உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்
141, 143, பிரான்ஸிஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 7016

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

(வரவுள்ளது)

பதவி வெற்றிடம்

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் மிக்கறி ஆண்களுக்கு கீழ்க்காணும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்பவர்கள் கல்வித் தராதரம், வயது, அனுபவம், ஆள்வலமையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளோடு 78-6-26-ந் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் போது முகாமையாளர், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை என்ற முகவரிக்கும் பதிவுத்தபால் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் வாவும் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தில்லேயே அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் முத்திரை இடப்பட்ட, சொந்த முகவரியிட்ட வெள்ள உறையுடன் ரூபா 1/- பெறுமதியான முத்திரைகளும் அனுப்புதல் வேண்டும். சங்கத்தின் நிரந்தர சேவையிலுள்ள மணியாளர்களுக்கு கீழ்க்குறிப்பிட்ட வயதெல்லை பொருந்தாது. விண்ணப்பதாரி குறைந்த பட்சம் இரண்டு வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் வதிபவராக இருத்தல் வேண்டும். இச்சங்கத்தின் தொழிற்பரப்பில் நிரந்தரமாக வதிபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். கடமை நேரம் காலை 6-00 மணி முதல் மறு நாள் காலை 6-00 மணி வரை.

பதவி — பெண் மேற்றன் பதவி 1

கல்வித்தராதரம்:- க. பொ. த. சா. 6 பாட சித்தி
வயது: 35 — 45
சம்பளம்: நாளொன்றுக்கு ரூபா 8/-
பிணை: ரூபா 500/-

பொதுமுகாமையாளர்.

78-05-09. 9549

ஆலயங்களில் மிருக பலி:

சைவபரிபாலன சபை தடுப்புப்பிரசாரம் செய்யும்

(யாழ்ப்பாணம்)

ஆலயங்களில் ஆடு, கோழிகள் பலிகொடுப்பதைத் தடுக்க சைவப்பெரியார்களும், மதம் பூசகர்களும் பிரசாரம் மேற்கொள்ள வேண்டும் என்று சைவ பரிபாலனசபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சபையும் இது விடயத்தில் தீவிர பிரசாரம் மேற்கொள்ள விருக்கிறது.

இதற்கான பொறுப்பினை சபையின் சமயப் பிரசாரகர் திரு. மு. மயில்வாகனம் ஏற்றுள்ளார்.

இப்பிரசாரம் பாடசாலைகள், சமயிகளின் பொறுப்பு மிகப் பெரியது என்று சபையினர் புகழ்ந்துள்ளது. (கே-உ)

சுங்க இலாகா

பிரசித்த ஏலவிற்பனை

தலைமன்னார்

கீழ்க்காணும் பொருட்களை பாவும் பிரசித்த ஏலவிற்பனையில் 21-06-78 திகதி காலை 9-30 மணிக்கு தலைமன்னார் சுங்க இலாகாவில் விற்கப்படும்.

இப்பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் 20-06-78 திகதி தலைமன்னார் சுங்க இலாகாவில் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரைக்கும் பார்வையிடலாம்.

ஏலத்தில் பொருட்களை வாங்குவதற்குத் தகுதி பெற்றோர், ஏலத்தில் தாங்கள் கூடிய விலை கோரிப் பெற்ற பொருளின் முழுத் தொகையையும் உடனடியாகச் செலுத்ி பொருட்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

ஏல விற்பனையை விதிகள் 28-05-54 திகதி அரசாங்க வர்த்தமானி இல. 10615 இல் வெளியிடப்பட்டுள்ளது.

கையொப்பம்,
D. H. EPA
பிரதம
சுங்க சேகரிப்பாளருக்காக

இல. T M R/ SALE/3/78
சுங்க இலாகா
தலைமன்னார்
06-06-78

பொருட் பட்டியல்

இறேற்றைகள், காப்புகள், ஊதுபத்திகள், பேனைகள், கைக்கடிகாரப்பட்டிகள், தெறிலைகள், மயிர்மாட்டிகள் முதலியன. 9520

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகர ஆணையாளரால் யாழ்ப்பாண முதிற வெளிச் சந்தையில் அமைத்துள்ள 12 "ஏ" இலக்கக் கடைகளைக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 23-6-78 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். 22-6-78 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை மாநகரசபையால் வழங்கப்படும் கேள்விப்படிவத்தில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

மேற்கொண்டு விபரங்களையும் நிபந்தனைகளையும் அலுவலக நேரத்தில் மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
06-06-78. 9550

ஆசிரியப் பணியினின்றும் ஓய்வு பெற்றார்

புலவர் நா. இவபாதசுந்தரனார் ஆசிரியர் துறையிலிருந்து இளைப்பாறினார். இவர் 1946ஆம் ஆண்டுக் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் புலவர் பட்டப்படிப்பில் தெற்றி பெற்றிருந்ததனால் சென்னையில் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் முகாமையில் விளங்கிய இந்தாதிரிப் பேட்டை உயர் நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்திருந்தார். பின் 1948ஆம் ஆண்டு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் தமிழாசிரியராகச் சேர்ந்தார். முப்பது வருடகாலத்தில் மகாஜனக் கல்லூரிக்குச்செய்த கடமைகள் நாம் மறக்கமுடியாததொன்றாகும். கல்லூரிக்கென்று ஒரு கொடியிடப்பட்டும், கல்லூரிக் கீதமும் இயற்றி அவைகளை இறவாத செல்வங்களாக இருக்கச்செய்துள்ளார்.

கல்லூரிக்கென்று விடுதி சாலை தொடக்கியபோது முதலாவதே முதல் விடுதி அதிபராக இருந்து விருத்திசெய்துள்ளார். ஆண்மையில் 'மில்க்வைற்' அதிபர் க. கனகராசாவைக் கொண்டு விடுதிஅன்றபொன்றைக் கட்டுவிப்பதற்குத் தூண்டுதலாயிருந்தார். மாணவர்களுக்குக் கற்பிக்கும்போது தமிழறிவோடு, உணர்வும் எழில் கொள்ளச்செய்வார். தெய்வீக தமிழ் மன்றத்தை நிறுவி இலக்கையிலும், இந்தியாவிலும் உள்ள குறிஞ்சிக்கீரை அழைத்துத் தமிழ் எழுச்சி மாணவர்கள் மனதில் அரும்பச் செய்துள்ளார். தமிழ் வேணும் திருநாள் என்ற கோட்பாட்டில் திரு. க. கனகசுந்தரம் பிள்ளை, வித்துவசிரோமணி சி. கணேசையர், வித்தகம் ச. சற்றதையாபிள்ளை, நாவலர் கோட்டம் திரு. முத்துத்தம்பிப்பிள்ளை என்போரின் வாழ்க்கை வரலாற்றை வெளியிட்டதோடு இவர்களின்படங்களையும், நிறத்தலைக்கும் பணியில் முயன்றுள்ளார்.

கல்வித்துறையில் முக்கிய பதுதியாகிய வடமாகாண ஆசிரிய சங்கத்தில் அங்கத்தவராயிருந்து தமக்கல்லூரிக்கும் வலிகாமம் வடக்கின் ஆசிரிய சங்கத்தில் தலைவர், உபதலைவர், காரியதரிசி, தனிதிகாரி போன்ற பதவிகளை வகித்திருக்கும் காலம் ஏற்றுப்பணிபுரிந்துள்ளார்.

வடமாகாண ஆசிரியர் சங்கம் நடாத்திய பரீட்சைப் பகுதியில் தமிழ் பரீட்சகராகவும் தலைமைப் பரீட்சகராகவும் இருந்துள்ளார். இப்பரீட்சைக்குத் தமிழ்மொழி பாடப் புத்தகமும், எழுதியளித்துள்ளார். மாணவர்களுக்கென்று கண்ணகி கதை, தமிழ்க்கதிர், சத்தியசரிதை, போன்ற நூல்கள் எழுதியுள்ளார் இன்னுஞ் சிறப்பாக யாழ்ப்பாணம் ஆரிய திராவிட சங்கத்தில் திருவாக உறுப்பினராய் இருந்ததோடு அச்சங்கத்தார் நடத்திய தமிழ் வகுப்பில் ஆசிரியராகவுந்தமிழ்ப்பணிபுரிந்துள்ளார். 'புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி' என்ற அரியதூலை வெளிப்படுத்தி இலக்கைச் சாகித்திய மண்டலப் பரிசையும்பெற்றார். இதனைவிட 'நாற்திய நோக்கு' மொழியுணர்ச்சி பாரதிச்சுடர், சர்வோதயம், மதக்குடிமைவிளக்கு, காந்திக் கீராமம், சைவக்கிரியைகளில் திருமுறை போன்ற நூல்களையும் வெளியிட்டுள்ளார். அத்தோடு அகில உலகத் தமிழராய்ச்சி மாநாடு இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் நிகழ்ந்தபோது இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்கள். இதில் இலங்கை மகாநாட்டுக் "அகத்திணையில் முதற்பொருள்" என்ற கட்டுரையை வாசித்துள்ளார். இவ்வாறு புலவர் அவர்கள் இந்த மும்பது வருட ஆசிரியத் தொழில் வாழ்வில் இன்னும் பல அரிய செயல்களைச் செய்துள்ளார்.

— ஓர் அன்பர்

15 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

(உடுப்பிட்டி)

கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் தண்ணீர்த் தாங்கி ஒன்றை நிர்மாணிப்பதற்கு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் 15,000 ரூபாவை பள்ளிக்கூடப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கியுள்ளார்.

இக் கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளை அடுத்தே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் திரு. தோமஸ் சப்பன் தெரிவித்தார். (அ)

கைதான பெண் பிணையில்செல்ல அனுமதி

(அரணவாய்)

வல்வெட்டித்துறையில் விடுதலைப்புலிகளைச் சோதனையிட்ட பொலிசார் அங்கிருந்து பொய்டாரியம், மின்சார பியூஸ் கம்பிகள் முதலியவற்றைக் கைப்பற்றினர்.

இது சம்பந்தமாக திருமதி பார்வதிப்பிள்ளை வேதம்பிள்ளை என்ற பெண்ணைச் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்த பொலிசார் அவரை பருத்தித்துறை நீதவான் திரு. அ. கனகரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

பலத்த வாதப் பிரதிவாதங்களின் பின்னர் எதிரிக்கு 500 ரூபா பிணையில்செல்ல அனுமதித்த நீதவான் அவரை இம் மாதம் 28ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். கைப்பற்றப்பட்ட பொருட்களை இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்புமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

எதிரியின் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். டி. இரத்தினவேலு, எஸ். யோகேசுவரன், கே. பாலசுப்பிரமணியம், எஸ். மனோரஞ்சன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (அ)

ஈழநாடு
The Eelanaadu

10,000 இந்திய வம்சாவழியினர்

ஆஸ்ட்ரேலியாவுக்கு போது பாதிக்கப்பட்டு, மலேசியாவுக்கு வந்து, சிங்கப்பூர்ச்சென்று வவுனியா, சிங்கிநோச்சிப் பகுதிகளில் குடியேறிய ஆயிரக்கணக்கான மலைத்தமிழர் பத்தாயிரம்பேர் உண்ண உணவின்றி, பருகத் தண்ணீரின்றி வாழ வழியற்றவர்களாக நிர்க்கதிக்குள்ளாகியிருக்கிறார்கள் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தொழிலுறவுக் காரியதரிசி திரு. எஸ். விஜயசிங்கம் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

இவர் வெளியிட்டுள்ள தகவல்கள் அதிர்ச்சியளிப்பது மட்டுமல்ல நெஞ்சை உருக்கும் வேதனை நிறைந்தனவுமாகும்.

வவுனியா, சிங்கிநோச்சிப் பகுதிகளுக்குச்சென்று அனாதரவான நிலைக்குள்ளாகியிருக்கும் இந்திய வம்சாவழித் தமிழர்களின் நிலையை நாம் நேரில் பார்த்ததாகவும் திரு. விஜயசிங்கம் கூறியிருக்கிறார்.

பலவித கஷ்டங்களுக்கும் ஆளாகியுள்ள அவர்களின் நிலையை ஜனாதிபதியினதும் பிரதமரினதும் கவனத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கொண்டு வருவதாகவும் திரு. விஜயசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

அகதிகள் பிரச்னை ஒரு இயக்கத்தினுடையதோ கட்சியினுடையதோ அல்ல. இது ஒரு இனத்தினுடைய பிரச்னை என்றுகூடச் சொல்லமுடியாது.

இது மனித சமூகத்தின் பிரச்னை. இதனால் நாம் இங்கு கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள நாடுகள் கூட விரைந்து முன்வந்தன.

இங்குள்ள பொதுக்தாபனங்கள் பலவும் நிதியும் பண்டங்களும் சேரிந்து அகதிகள் பலருக்கும் உதவின. அகதிகள் புனர்வாழ்வுச்சபை பொருளும் ஆர்ப்பிக்கப்பட்டு இன்னும் அது இயங்கிவருகிறது.

இடம் பெயர்ந்துவந்த அகதிகளைக் குடியேற்றுவதிலும் வேலைவாய்ப்புத்தேடிக் கொடுப்பதிலும் அவர்களுக்கு உணவு, உடை வழங்குவதிலும் சமூகசேவை தாபனங்களும் அகதிகள் புனர்வாழ்வுச் சபையும் கவனம் செலுத்தவில்லையென்று சொல்ல முடியாது.

இந்திய வம்சாவழியினரைப் பொறுத்தவரையில் இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றவர்களுக்குக் குடியேற்றத் திட்டங்களில் இடம்பெற்றுக் கொடுப்பதில் அதிக சிரமம் இல்லை. ஆனால் இலங்கைப் பிரஜாவுரிமை பெறாத இந்தியவம்சாவழியினர் விஷயத்தில் பல கஷ்டங்கள் இருக்கின்றன.

அகதிகள் முகாம்கள் சம்பந்தமாக ஏற்பட்ட கஷ்டங்கள், சிரமங்களை மறந்து விடமுடியாது.

ஆனாலும் பத்தாயிரம் மக்கள் புதிய இடங்களில் குடியேறி வாழவழியின்றிக் கஷ்டப்படும் நிலையை நீக்கி அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டியது அவசியமானதும் தவிர்க்கமுடியாததுமான கடமையாகும்.

இப்பகுதி மக்களும் அகதிகள் புனர்வாழ்வுச் சபையும் மற்றும் பொதுநிறுவனங்களும் இந்த மக்களுக்கு வாழ்வளிப்பதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதற்கு முன்வரவேண்டும்.

அரசாங்கமும் இவர்களது நிலையையிட்டுப் பாராமுகமாக இருக்கமுடியாது. இதேசமயம் இந்திய வம்சாவழிமக்கள் சம்பந்தப்பட்ட இந்த விஷயத்தில் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு பெரும் பொறுப்பும் கடமையுமிருக்கிறதென்பதையும் மறப்பதற்கில்லை.

"தமிழகம் இருந்து யாழ்வரும்

தமிழறிஞர், புலவர் அனைவரும் தி. மு. க. வினர் என்றஎண்ணமா?"

சேக்கிழார் விழாவில் கேள்வி

(யாழ்ப்பாணம்)

"தமிழகத்தில் இருந்து ஈழத்தின் வடபகுதிக்கு எந்த வொரு அறிஞரோ அல்லது புலவரோ வருவதெக்குறி. இலங்கை அரசு அவர்களை திராவிடமுன்னேற்றக் கழகத்தவர் என்று கருதி விஸாவழங்குவதில் சுணக்கம் செய்கின்றது. இந்நிலைமையில், இச் சேக்கிழார் விழாவில் கலந்து கொள்ள வருவதை தரவிருந்த புலவர்களெனும் அவரது துணைவியாரும் வரமுடியாமல் போய்விட்டது. என்றாலும் இவ்வருடமுடிவிற்குள் புலவர் சேனையும் அவரது துணைவியாரையும் ஒரு மாதகாலம் யாழ்ப்பாணத்தில் தங்கி சொற்பொழிவாற்ற சேக்கிழார் மன்றம் ஒழுங்கு செய்யும், என்று சேக்கிழார் விழாவில் மாலை நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகித்த திரு. த. சோமகாந்தரம் குறிப்பிட்டார்.

விழாவில் ஆரம்ப நிகழ்ச்சியாக சேக்கிழாரது உருவப்படமும், வெள்ளிப்பேழையில் வைக்கப்பட்ட பெரியபுராணச் சுவடிகளும், அலங்கரிக்கப்பட்ட யானை வாகனத்தில் வைத்து, வண்ணை ஸ்ரீவைத்திகவரன் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக யாழ்ப்பாணத்து இந்துக்கல்லூரி பிரார்த்தனை மண்டபத்திற்கு எடுத்துவரப்பட்டது.

திரு. த. சோமகாந்தரம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"சேக்கிழார் மன்றம் கலாச்சார அலுவல்களின்கீழ் பதிவு செய்யப்படுவதற்கு தகுதிபெற்றதென எற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. எனவே இம் மன்றத்தை எதிர்காலத்திலும் பெருவளர்ச்சியுடன் இயக்கவைப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

புலவர் சேனுக்கும் அவரது துணைவியாருக்கும் விஸா வழங்குவதற்கு இலங்கை அரசிடமிருந்து அனுமதி பெற்றுக் கொடுத்தும், அவர்களுக்கு விஸாவழங்கப்படவில்லை. இது இலங்கையில் தாரிய அரசு நடைபெறுகிறதுஎனவர்ணிக்கப்படுவதற்குமுற்றிலும் முரண்பட்டது. இங்கு பௌத்த சமயத்தவர்களுக்கு ஒருநீதி இந்து சமயத்தவர்க்கு ஒரு நீதி கடைப்பிடிக்கப்படுவதை காட்டுகின்றது. சேக்கிழார் மன்றம் புலவருக்கு விஸா வழங்காதது குறித்து ஜனாதிபதியைச் சந்திக்கும்" என்றார்.

"சேக்கிழார் கண்ட சமயநெறி" என்னும் தலைப்பில் திரு. த. கப்பிரமணிய ஐயர் பேசுகையில், தமிழ் இலக்கியங்களில் பெரும் காப்பியங்கள் காலத்துக்குக்காலம் இயற்றப்பட்டிருந்தாலும் முதன் முதலில் இயற்றப்பட்ட பக்தி இலக்கியம் மணிமேகலையே யாகும். மணிமேகலையில், இல்லறவாழ்க்கையில் இருந்து துறவறநிலைக்குவேண்டிய சமய கருத்துக்கள் புகுத்தப்பட்டுள்ளன. ஆனால் சேக்கிழார் பெருமானே, பிள்ளை பெரிய புராணம் என்ற பக்தி இலக்கியத்தை உருவாக்கினார். சேக்கிழார் 12ம் நூற்றாண்டிலே பெரியபுராணத்தை இயற்றுகின்ற நேரத்தில் 64 நாயன்மார்களினதும் 9 தொகையடியார்களினதும் வாழ்வை, வரலாற்றை அற்புதங்களை நேரடியாகப் பார்த்து காப்பியம் வடித்தவர் அல்லர். நாயன்மார்கள் வாழ்ந்த சேரிகளுக்கும், கிராமங்களுக்கும் சென்று வரலாறுகளைச் சான்றுகளை ஆராய்ந்து 'பெரியபுராணத்தை வார்த்திருக்கிறார்.

மணிமேகலை ஒருபக்தி இலக்கியமாகஇருந்தபோதும், துறவு வாழ்வையை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. பெரியபுராணம், உலக வாழ்க்கையில் எப்படியும் வாழலாம் என்ற நிலையை உணர்த்துகின்றது. இறைவன் ஒருவன் இருக்கின்றான். அவனை அடையும் வழி அன்புவழி ஒன்றேதான் என வலியுறுத்தி நிற்கின்றது.

பெரிய புராணத்தில் மற்றொரு ஒருமைப்பாடு நன்கு தெளிவாகின்றது. சேக்கிழார் தமது பரந்த உள்ளத்தினால் நாயன்மார்கள் எவராயிருந்தாலும்; ஓர் பாசுரம் இயற்றியிருந்தாலும், அவர்களையெல்லாம், ஒதுக்காது அடியவர் எல்லாம் பேரியவர் என்ற நோக்கில் ஒரு கூட்டுக்குள் 64 நாயன்மார்களையும் 9 தொகையடியார்களையும் ஒன்றுகூட்டியுள்ளார். இது அவரது ஒருமைப்பாட்டை நன்குணர்த்துகின்றது" என்றார்.

முதல்நாள் விழாவில் இறுதி நிகழ்ச்சியாக உடுப்பூர் பெரி சோமாஸ்கந்தன் குழுவினர் "சேக்கிழார் காப்பியம்" என்னும் வில்லிசை நிகழ்த்தினார். (வெ. உ)

'முறையின்றிகடை எடுப்பின் பாவனையாளர்க்கே பாதிப்பு'

பழைய மார்க்கட் கடைதிறப்பு வைபவத்தில் ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணம் நகரின் மார்க்கட்டிலுள்ள ஐவுளிக் கடைகளில் அதிகாலமான விலைக்குத் துணிகள் விற்கிறார்கள். அதிகுள்ளகடைகளொன்றில் மார் எட்டரை ரூபாவிற்ற துணியை கல்தூரியார் வீதியில் உள்ள கடைகளொன்றில் ஏழரை ரூபாவிற்கு என்று கூறி வாங்கியிருக்கிறார். வர்த்தகர்கள் கடைகளை முறையாக எடுக்காமல் வேதுநழியில் எடுத்தால் துணிகளைக் கூடிய விலைக்கு விற்க வேண்டிய நிலைதான் ஏற்படும்."

யாழ்ப்பாணம் பழையமார்க்கட்டில் திறவுப்பட்டுள்ள கடைகளைத் திறந்துவைத்துப் பேசிய யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார்.

ஆணையாளர் திரு. வெஞ்ஞானம் மேலும் கூறியதாவது:

"பழைய மார்க்கட்டில் எரிந்த கடைகளில் உரிமையாளர்களுக்குப் புதிய கடைகளைக் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் தான் இக் கடைகள் கட்டப்பட்டன. இக் கடைகளைத் திருப்பிக்கொடுப்பதற்கும் டெண்டருக்கும் எல்லாவித தொடர்புமில்லை.

ஏழு வருடத்திற்குப் பின்னர் இக்கடைகளை டெண்டர் போடுவதா இல்லையா என்ற பிரச்னைதான் இருந்து வந்தது. இப்பொழுது டெண்டர் போடும் பிரச்னை எந்தச் சந்தர்ப்பத்திலும் எழவில்லை.

மாதிக்கப்பட்டோர் நலன்கருதி...

மாண்பமை பெரமுன இக்கடைகளைக்கட்டி ஆரம்பித்த சமயம் மெல்வந்து இதனை கேக்மாடியாகக் கட்டுமாறும் நவீன மார்க்கட் 3-ம் கட்டவேண்டியாகச் செய்யும்படியும் ஆலோசனை கூறினார்கள் பாதிக்கப்பட்டவர்கள் சிக்கிரம் தொழில் செய்ய ஏதாவது வழிசெய்ய வேண்டும் என்பதற்காகவே, எல்லிதமான பகுமின்றி இக் கட்டிடத்தை ஆரம்பித்தேன்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. யோகேஸ்வரன் இந்த விஷயத்தில் அந்த நாள் முதல் இன்றுவரை பலதடவை என்னுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

முன்னாள் மேயர் திரு. இ. நாகராசா, அமைதியான முறையில், அடக்கமாக, இக் கடைகள் விஷயமாக என்னுடன் தொடர்புகொண்டிருந்தார். திரு. பஸீரும் இதுபற்றி தொடர்பு கொண்டிருந்தார். இவர்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"கடைகள் எரிந்ததன் காரணமாக அழகான கடைகள் கிடைத்திருக்கின்றன. இன்று நடப்பவை நாளை சரித்திரமாகிறது. அதேபோல் இந்நிலைமையும் சரித்திரமாகும்."

எனது நிர்வாகத்தில் ஊழல் இல்லை

"நான் அரசாங்க ஊழியன் என் நிர்வாகத்தில் ஊழல் இடையாது. ஊழல் ஒழிய வேண்டும் என்று கூறுகிறவர்களே, என்னை ஊழல் செய்யும்படி கூறுகிறார்கள். நவீன மார்க்கட்டில் ஒரு கடை 48,000 ரூபாவிற்கு ரேண்டர் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. யாழ் மாநகரசபை சரித்திரத்தில் முன்பு இப்படி நடந்திருக்கிறதா? முன்பெல்லாம், எப்படியெல்லாமோ கடைகள் வழங்கப்பட்டன. அந்தப் பணம் வாவும் சபைக்கு வந்து சேரவில்லை. ஆனால் நான் டெண்டருக்குக் கொடுத்த 48,000 ரூபாவும் சபைக்கு வந்தசேர்ந்துள்ளது. இது நகர அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட்டது. இதைப்பற்றிப் பொதுமக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டியது அவசியம். சிலருக்கு டெண்டர் என்றாலே வாதியிருக்கிறது.

எதையும் கட்டாயமாகப் படுத்துவது சரியல்ல. நல்ல நாய் இருந்தாலும் வெறிநாயாகப் புகுத்திருந்தால் எதிர்த்துப் போராடுவது மனித சபாவம்.

மொரார்ஜி தேசாய்

"மரணவர்கள்

ஒழுக்கம், பண்பு குன்றுகிறது' அதிபர்கவலை

[இணுவில்]

மரணவர்களிடையே பண்பும், ஒழுக்கமும் குன்றிவருவது எந்நாட்டுக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள பிரச்னையாக இருக்கிறது. இதனைத் தீர்க்க பாடசாலைகளும் பெற்றோரும்பங்கெடுக்கவேண்டும்."

இவ்வாறு கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. மாமாதேவன் தமது வருடாந்த அறிக்கையை பரிசளிப்பு விழாவில் சமர்ப்பித்து பேசுகையில் குறிப்பிட்டார்.

பதுளை சுவாதார அத்தியட்சர் திரு. நா. யோகநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

தமது அறிக்கையில் திரு. மாமாதேவன் மேலும் கூறியதாவது:

"பல்கலைக்கழகம் புகுந்தவிடவேண்டும் என்ற ஒரே நோக்கில் மாணவர் பலர் தனியார் கல்விநிலையங்களில் போய்க் குவிகிறார்கள். இத்திருவளர்களால்தான் பெரும்பாலும் ஒழுக்கம் குன்றுகிறது. பாடசாலை நேரத்திலும் தனியார் நிறுவனங்களில் மாணவர் காணப்படுவது விந்தையாக உள்ளது. பெற்றோர் விழிப்பாக இருந்து பிள்ளைகள் நல் வழியில் செல்ல உதவவேண்டும்." ச-உ

ஏன் இந்தப்பயம். யார் யாருக்கோ போய்ச்சேரும் பணம் சபைக்குக்கிடைத்தால் என்ன? எங்கிடம் குற்றம் குறை இருந்தால்மக்கள் நேரடியாகச் சொல்லவேண்டும்.

அரசியல்வாதியல்ல

"நான் அரசியல் வாதியல்ல; எதிர்காலத்தில் நேரடியாக அரசியல்வாதியாகவரமுயற்சியுமல்ல, அரசியல்வாதியாக வரும்தகுதியும் இல்லை, வசதியுமில்லை."

யோகேஸ்வரனுக்கு 'சிவா' யாராட்டு

நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

இந்தவைபவத்தை விழா என்று கூறத் தயங்குகிறேன். இவ்விழா என்ன நிகழ்ச்சியைக்கொண்டு நடக்கிறதென்பதை இந்நாள் விழா என்று கூறக்கூடிய நிலையில் இல்லை. இதனை விழா

[5ம் பக்கம் பார்க்க]

"கேந்திர ஆயுதக் கட்டுப்பாடு:

ரஷ்யாவுடனான பேச்சுவார்த்தை முன்னேற்றம் அடைகிறது"

— ஜிம்மிகார்ட்டர்

வாஷிங்டன், ஜூன் 11

கேந்திர ஆயுதக் கட்டுப்பாட்டுஉடன்படிக்கைதொடர்பாக சோவியத் யூனியனுடன் நடத்திவரும் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காணப்படுகிறது என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் திரு. கார்ட்டர் இதனைத் தெரிவித்தார்.

அணு ஆயுதப் பரிசோதனைத் தடை குறித்தும் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் அவர் சொன்னார்.

இது இவ்வாறு இருக்க கேந்திர ஆயுதக் கட்டுப்பாட்டு உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் முன் எதிர்த்தே நேற்றம் ஏற்படக்கூடுமானால் அமெரிக்க இந்த உடன்படிக்கையை தாம் பொருட்படுத்தப் போவதாக திரும்பிவிடுவதாக களின் தலைவரான ஜெபேட் சோவியத் ஒன்றியத்தின் பேச்சுவார்த்தைக்குழுத் தலைவர் தெரிவித்திருக்கிறார். (உ)

"ஸயர் தெருக்கடி:

கலகக்காரரின் ஊடுருவலைத் தடுக்க முடியவில்லை"

கியூபா பிரதமர், கார்ட்டரிடம் தகவல்

ஹவானா, ஜூன் 11

ஸயரிலுள்ள ஷாபா மாகாணத்தில் கலகக்காரர்களின் ஊடுருவலைத் தடுக்க தாம்முயற்சித்தும் அது பயனளிக்காமல் போய்விட்டது என்று கியூபா பிரதமர் திரு. பிடல் காஸ்ட்ரோ அமெரிக்கா ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டரிடம் தெரிவித்துள்ளார்.

இந்தவிஷயம் அமெரிக்க செய்தி விநியோக ஒன்று வெளியிட்டது.

ஷாபாவில் அமெரிக்கப் பிரதிநிதியிடம் திரு. காஸ்ட்ரோ கலகக்காரர்களின் ஊடுருவலை தடுக்க இயலாது போய்விட்டது என்று தெரிவித்தாரா என்று கூறப்பட்டது.

இதேவேளை ஸயரில் ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலை குறித்து பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. ஜேம்ஸ் கலகம் அவசியமாக இருந்து வருகிறார் என்று கொள்கை வேடில் கட்சித் தலைவி திருமதி தாச்சர் கண்டனம் தெரிவித்திருக்கிறார். (உ)

சங்கச் செய்திகள்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி கமக்காரர்சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: ரி. முருகேசம் பிள்ளை, தலைவர்: கே.பாக்கியநேசன், உப தலைவர்: வி. தங்கிநாயகம், செயலாளர்: இ. இரத்தினசபாபதி, உபசெயலாளர்: கே. சண்முகநாதன், பொருளாளர்: வி. கதிரவேலு.

குறுப்பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

●

இலங்கை அரசினர் ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் (வடமராட்சி) நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்:

தலைவர்: க. தாமோதரம் பிள்ளை, உபதலைவர்கள்: எ. தம்பையா, வி. சோமசுந்தரம், எக். இரத்தினவிநாயகம், செயலாளர்: கே. இராஜகிஷ்கன், உபசெயலாளர்: ஏ. பொன்னம்பலம், பொருளாளர்: எக். அந்தோனிமுத்து. 15 பேர்கொண்ட செயற்குழுவும் தெரிவாகியது.

●

அரசாங்க எழுதுவினைஞர் சங்க திருகோணமலை கிளை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்:

தலைவர்: சி. சுந்தரா, மாவட்ட விவசாயவிரிவாக்க அலுவலகம், உபதலைவர்: பி. எச். நளராஜா, பரிபாலனக்கிளை, கச்சேரி, செயலாளர்: அ. கிஷ்கராஜா, அரசாங்கஅதிபர் அலுவலகம் (தாம்ச்சங்க மாவட்ட பிரதிநிதி), உபசெயலாளர்: இரா. டிலசேந்திரன், நீர்ப்பாசன இலாகா, பொருளாளர்: ந. துரைராஜா, தேர்தல் அலுவலகம். 9 பேர்கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

மேட்டூரில்

அனல் மின்சார நிலையம்: தமிழக அரசுயோசனை

சென்னை, ஜூன் 11

"தமிழ்நாடு அரசு மேட்டூரில் அனல் மின்சார நிலையம் ஒன்று அமைக்கும்படி மத்திய அரசிடம் யோசனை தெரிவித்துள்ளது. இந்த யோசனையை மத்திய அரசாங்க பரிசீலித்துவருகிறது."

இவ்வாறு பாரத மத்திய எரிபொருள் அமைச்சர் திரு. கி. இராமச்சந்திரன் கூறினார்.

தூத்துக்குடிக்கு விஜயம் செய்த அமைச்சர் அங்கு நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் இவ்வாறு கொன்னார்.

மின்சாரம் பற்றாக்குறை ஏற்படாது தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார். (உ)

"பஸ்சேவை சீர்பெற எம். பிக்கள் ஒத்துழைப்பும் தேவை"

— போக்குவரத்து அமைச்சர்

(தொழும்பு)

"பஸ்சேவை சீராக நடைபெறுவதற்கு எம். பி.க்களின் ஒத்துழைப்பும் கோரப்படவேண்டும்" என்று போக்குவரத்து அமைச்சர் அஸ்ஹரஜ் எம். எச். கொழும்பில் கூறினார்:

பிராந்திய சபைகளுக்கு பிரதிநிதிகளை நியமித்ததன்மூலம் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் பேசுகையிலேயே இவ்வாறு சொன்னார்.

பிராந்திய சபைகளின் பிரதிநிதிகளாக ஊழியர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

இ. போ. ச. பஸ்சேவை ஒழுங்காக நடைபெற ஒவ்வொரு தொகுதி எம். பி.க்களின் ஒத்துழைப்பும் கோரப்படவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். இ. போ. ச. பஸ்களைப் பழுதுபார்ப்பதற்கான நோக்கங்களை அவர் விளக்கினார். (உ)

"யாலஸ்தீன மக்களுக்கு எதிராக கார்ட்டர் சதி"

யாஸிர் அரபாத் குற்றச்சாட்டு

லண்டன் ஜூன் 11

"பாலஸ்தீன மக்களுக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் சதிசெய்து வருகிறார்" என்று பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனாப் யாஸிர் அரபாத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தென்லெபனானுக்குள் இஸ்ரேலியத் தருப்புக்கள் ஊடுருவல் செய்ததும் அமெரிக்காவின் சம்மதத்தைப் பெற்றுத்தான் என்றும் அவர் மேலும் குற்றஞ்சாட்டினார். (உ)

ஆசிரியர் பற்றுக்குறை: அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலைகளில் ஆசிரியர்கள், ஊழியர்கள் பற்றுக்குறைகளைத் தீர்ப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது:

ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இதுவிடயத்தில் புதிய நடைமுறை ஒன்றினை கல்வி அமைச்சு அமுல் செய்யவிருக்கிறது.

பிராந்திய கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரியர், ஊழியர் பற்றுக்குறை பற்றி எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து அமைச்சு பணிப்புரை ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது: (உ)

வெளிவாரி மரணவர் விண்ணப்பிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரிப் படிப்பு நெறிக்கு மாணவர்களைப் பதிவு செய்ய விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன. கலை, விஞ்ஞான, சட்ட வர்த்தக மாணிப்பட்டங்கள் பெறுவதற்குரிய பரீட்சையில் வெளிவாரியாகத் தோற்ற விருப்புவோர் பதிவு செய்துகொள்ளலாம்.

வெளிநிலைச் சேவை முகவர் நிலையத்தில் பதிவு செய்வதற்குரிய வயதெல்லை 25 க் இருந்து 21 ஆக குறைக்கப்பட்டுள்ளது. ஜூன் 22 முடிவு தேதியாகும். விண்ணப்பப் பத்திரங்களை வெளிநிலைச் சேவை முகவர் நிலைய பணிப்பாளருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். (ச)

வண்டியில் சிக்கி மரணம்

(வவுனியா)

உக்கிளாங் குளத்தைச் சேர்ந்த பூச்சி முருகையா என்பவர் மாட்டுவண்டியிலிருந்து தவறி விழுந்ததனால், வண்டிச் சக்கரம் மார்பில் ஏறி, துடிதுடித்து இறந்தார்.

முருகையா என்பவர் சமைக்க கடைக்குச் சென்று மாட்டுவண்டியில் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தபோது தவறி விழுந்ததாகவும், சக்கரங்கள் மார்பில் ஏறியதாகவும் அவரவர்கள் அவரை உடனே வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது இறந்ததாகவும் கூறப்படுகிறது. திரு. மரண விசாரணை அதிகாரி திரு. வி. விக்கிவராசா சாட்சிகளை விசாரணை செய்து விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

இன்னமும் திருத்தப்படவில்லை

(வவுனியா)

கடந்த ஆண்டு ஓரத வன் செயலினால் சேதமடைந்த வவுனியா நகரசபைக்குச் சொந்தமான நவீன சந்தையிலுள்ள கடைகள் திருத்துவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டும் இதுவரை திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் அவற்றில் வர்த்தகம் செய்ய வர்த்தகர்கள் தொழிலின்றி திண்டாடுகிறார்கள்.

யாழ். நாடகக் கல்லூரி நடத்தும் கருத்தரங்கும் களப்பயிற்சியும்

(யாழ்ப்பாணம்)

"நடைமுறைக்கல்லூரி"யினரால் எதிர்வரும் 24ம் 25ந்திகளில் நாடகம்பற்றிய கருத்தரங்கமும் களப்பயிற்சியும் நடாத்தப்படவிருக்கிறது.

திருநெல்வேலி வடக்கில் அமைந்துள்ள கல்லூரியில் வேப்படி கருத்தரங்கில் பல அறிஞர்கள், விஞ்ஞர்கள் கலந்து கொள்வர்.

முதல்நாளை காலை நிகழ்ச்சியை கலையரசு சொர்ணலிங்கம் ஆரம்பித்துவைத்து உரை நிகழ்த்துவார். "நாடகமும்சமூக ஊட்டமும்" என்ற தலைப்பில் கலாநிதி கா. சிவத்தம்பி விரிவுரை நிகழ்த்துவார். கலந்துரையாடலும் களப்பயிற்சியும் இடம்பெறும்; அன்று காலை மேடைநாடகம்பிரதிஎழுதல்' என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடைபெறும்.

திரு. இ. முருகையன் தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் திரு. இ. மகாதேவன் (தேவன் - யாழ்ப்பாணம்), திரு. க. செல்வநாயகம் (சொக்கன்), டாக்டர் எக். வெஞ்ஞானசுந்தரம் (நந்தி) ஆகியோர் கருத்து வழங்குவர். தொடர்ந்த நாடகம் தயாரிப்பு, ஒப்பனை, உடை, ஒளி, ஒலி சம்பந்தப்பட்ட பயிற்சிகள் நடைபெறும்.

மறுநாளை நிகழ்ச்சியாக காலையில் 'அரியல் நாடகம்' என்ற தலைப்பில் கலந்துரையாடல் கலாநிதி கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெறும். திரு.வி. பொன்னம்பலம், திரு. ச. முத்துலிங்கம், திரு. மு. ஆனந்தராஜா ஆகியோர் பங்குகொள்வர். 'இன்றைய உலகில் நாட்டுக்கூத்தின் பங்கும் பயனும்' என்ற தலைப்பில் நடைபெறும் கலந்துரையாடலில் திரு. இ. மௌனகுரு, பா. அமிர்தநாதன் (மூன்றாம் கவி) ஆகியோர் பங்குகொள்வர். 'நாடகவிமர்சனம்' என்ற தலைப்பில் நடைபெறும் கலந்துரையாடலில் திரு. எக். எம். கோபாலரத்தினம் தலைமை வகிப்பார்.

திரு. சே. எக். வேலுமாரன்.

[5ம் பக்கம் பார்க்க]

சித்திரக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுஜன நூலகக் கேட்போர் கூடத்தில் இம்மாதம் 14 ம் திகதி முதல் 25 தேதிவரை சித்திரக் கண்காட்சி ஒன்று நடைபெறவிருக்கிறது. கைநடி செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலை அதிபர் திரு. டேவிட் இதனைத் திறந்துவைப்பார். இதனை காலை 9 மணிக்கும் மாலை 7-00 மணிக்கும் இடையே பொது மக்கள் அனைவரும் பார்க்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது; (ச)

Regal (Jaffna)
Daily at 4-45, 7-00 and 9-30 p.m. only
"SANDS OF THE DESERD"
(color) - Wstern Picture

சாந்தி யாழ். நகர் — போன் 7642
தினசரி 5 காட்சிகள்
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
Grand Release! Comedy Film!!
Charlie Chaplin Festival
ஜூன் 17—18 காலை 8-30 மணிக்கு மட்டும்
FLOWERS FOR THE MEN IN THE MOON

வின்ஸர் — யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
வைஜி — மஞ்சுளா — நாகேஷ்
நடித்த
எங்க தங்க ராஜா

வெலிங்டன் (மாரி: 2417)
தினசரி 4 காட்சிகள்
வைஜி - சாவித்திரி
கைகொடுத்த தெய்வம்

விக்டோ யாழ். 7698
சிவகுமார், அஞ்சலி
(மாரி: 2417)
மதனமாளிகை

5வது ஹவுஸ்புல் வாரம்!
83நாட்களிலிருந்து சாதனை குறைவிலாத இரண்டாவது வாரம்!
ராணி வைஜி — மஞ்சுளா
(மாரி: 2417) நடித்த
உத்தமன்
(சக்திமான் கலர்)
காலை 8 நேரக்காட்சி குறிப்பிடமுடியாமலிருக்கு வருந்துகிறோம்.

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) மெற்றிரோகலர்
தினசரி 4 காட்சிகள் 6வது வாரம்
முத்துராமன் — சந்திரகலா
நடித்த
காலங்களில் அவன் வசந்தம்

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
MURPHY'S WAR

நாகம்ஸ் (மல்லாகம்)
தினசரி
6-45, 10-00
வைஜி - கே. ஆர். விஜயா
நடித்த
எதிரொலி

வெஸ்லி (நாவிப்பாரம்)
தினசரி 6-30, 9-30
வைஜி - சாவித்திரி
குறவஞ்சி

தொடர்ந்தும் ஹவுஸ்புல் காட்சிகளுடன் வெற்றிநடைபோடுகிறது
ராஜா
யாழ்நகர்
தினசரி
4
காட்சிகள்
புரட்சி டைரக்டர்
K. பாலசந்தரின்
கைவண்ணம்
ஃ கமலஹாசன்
ஃ ஆலம்
ஃ Y. விஜயா
நடித்த

கலாகேந்திராவின்
மன்மத லீலை
வண்ணப்படம்

கூட்டுறவுச்சங்க புதிய நிர்வாகிகள்

(கரவெட்டி)

கம்பஸ்வேலி உடுப்பிட்டி தெற்குபனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் கரணவாய் போல் வடக்கு விக்கிய சாலை கூட்டுறவுப்பரிசோதகர் திரு. ஞா. ஜோர்ச் தலைமையில் நடைபெற்றது. கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. த. வேலாயுதபிள்ளை முன்னுரை வழங்கி ஆரம்பித்த புதுவருட தேர்தல் நடைபெற்றது.

தலைவர் வி. கிருஷ்ணபிள்ளை உபதலைவர் செ. தங்கராசா காரியதரிசி கோ. துரைரெத்தினம் உபகாரியதரிசி வி. இராசேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

க. நடராசாவும் க. இளையதம்பி செ. திருநாவுக்கரசு வி. இராசையதம்பி தா. சண்முகம் ஆகியோர் கமிட்டி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ். —

(4 ம் பக்கத்தொடர்ச்சி)

அருட்திரு சா. ம. செல்வரத்தினம் அடிகளார் (கரவெட்டி செல்வம்) சிந்திரன் ஆகியோர் பங்குகொண்டனர்.

செயலாளர் திரு. ம. சண்முகவிங்கம் நன்றியுரை வழங்கினார்.

நாடக ஆர்வமிகுந்தோரும் பொதுமக்களும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்துவாரு கேட்கப்படுகின்றனர். [ச]

பாஷையூர் அந்தோனியார் திருநாள்

அருட்திரு பிதா
வி. எம். இராஜநாயகம்

பாஷையூர் பங்கு மக்களின் பாதுகாவலராகிய புனித அந்தோனியார் திருநாள் இன்று நடைபெறுகிறது.

1195ம் ஆண்டு ஆவணி மாதம் 15ம் திகதி லிஸ்பன் நகரத்தில் பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்த புனித அந்தோனியார் இளம்பராயத்தில் இறைவனிடத்தில் மிகுந்த பக்தி யுடையவராகத் திகழ்ந்தார். தனது 15ம் வயதில் புனித அகுஸ்தீனார் சபையின் குருத்துவக்கல்லூரியில் சேர்ந்து எளிமையான வாழ்க்கை நடாத்தினார். மறைநூல்களைக் கற்றுப் பாண்டித்தியம் பெற்ற இவர் இயேசுபாலனைத் தனது வாழ்வில் ஏற்றுப் பாக்கியம் பெற்றார். மொரோக்கோ தேசத்தில் மறைபரப்புவதற்காகச்சென்ற ஐந்து குருக்கள் கொலைசெய்யப்பட்ட நாட்களில் அந்நாட்டு மக்களுக்குச் சிறிதுவரில் நற்செய்தியைப் பரப்பவேண்டும் என்ற ஆவல் இவருக்குஉண்டாயிற்று. இதனால் இவர் தனது 26ம் வயதில் பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்தார். பின்னர் மொரோக்கோ நாடுநோக்கிச் சென்று மறைபரப்புப் பணியில் ஈடுபட்டு இயேசுநாதரின் பெயரால் அநேகபுதுமைகளைச் செய்தார். இவரது போதனைகளைக்கேட்ட ஆயிரக்கணக்கான மக்கள் மனந்திரும்பினார்கள். மொரோக்கோவில் இருக்கும்போதே இவர் நோய்வாய்ப்பட்டு 1231ம் ஆண்டு ஆனி மாதம் 13ம் திகதி மரணமானார். இறந்தவரை இறை பணியாளனே வாழ்ந்தஇப்புனிதரது உடல் பதுவை நகரில் அடக்கம் செய்யப்பட்டது. இயேசுக் கிறிஸ்துநாதரின் திருப்புகழைப் பரப்பிய அன்னாரது புனித நாமம் இன்றுவரை அழியாமல் உள்ளது. இவர் இறந்த ஒரு வருடம் முடியுமுன்னரே புனிதரின் ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டார்.

அந்தோனியார் உயிருடன் இருந்தபோது மல்லுமல்லாமல் இறந்தபின்னரும் இயேசுநாதரின் பெயரால் பல புதுமைகளைச் செய்தார். இன்றும் செய்துவருகின்றார். இதனால் தான் எல்லா மத மக்களும் இவரிடம் வந்து தங்களுக்கு வேண்டியவற்றைப் பெற்றுச் செல்கின்றார்கள் செவ்வாய்க்கிழமை தோறும் பாஷையூர் புனித அந்தோனியார் கோவிலுக்குவரும் பக்தர் கூட்டமே இதற்குச்சான்று. இந்நாட்டளவில் இப்புனிதரின் பெயரால் விசேஷ ஆராதனைகள் நடைபெறுகின்றன.

பாஷையூரில் 1844ம் ஆண்டு புனித அந்தோனியார் ஆலயத்தை அருட்திரு. புவக்கீன் கபிரியேல் அடிகளார் நிறுவினார் அன்று தொடக்கம் இப்புனிதரே பாஷையூர் மக்களின் பாதுகாவலராகத் திகழ்கின்றார். அருட்திரு. டொனால்டோ அடிகளாரால் இவ்வாலயம் பெரியதாக நிர்மாணிக்கப்பட்டது. யாழ். நகரில் உள்ள ஒரேயொரு புனித அந்தோனியார் ஆலயமாகிய இன்று இன்று 13ம் திகதி திங்கட்கிழமை காலை தேவநற்கருணை ஆசீர்வாதம் நடைபெறும். 13ம் திகதி காலை திருநாட்பூசையுடன் மாலையில் புனிதரின் திருச்சொரூப பவனி நடைபெற்று புனிதரின் ஆசீர்வாதமும் வழங்கப்படும். நம்மை நம்பியவரும் பக்தர்களுக்காகப் புனித அந்தோனியார் இறைவனிடம் வேண்டி அவர்களுக்கு அருள்புரிவார்.

முறையின்றி —

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

என்று கருதவில்லை.

"நமது வாழ்வில் உள்ள எல்லாத்துறையும் இன்று அரசியல்தான். அரசியல் கலவாத துறை எதுவுமே இல்லை.

தீமையில் நன்மை

"சில தீமையிலும் நன்மை ஏற்படுவதுண்டு. பழையவாசக்கடன் எரிந்ததினால் நல்லதொரு கட்டடம் கிடைத்திருக்கிறது. அதற்கு மாநகரசபை ஆணையாளர் திரு. நா. வெஞ்சுனத்தை பாராட்டவேண்டியது கடமை. ஆல்லும் பகலும் உழைத்து 10 மாதத்திற்குள் இதனைக் கட்டி எழுப்பியுள்ளார். இக்கட்டடத்தை உருவாக்கப் பல வழிகளிலும் பாடுபட்டவர் யாழ்ப்பாணம் பி. திரு. வி. யோகேஸ்வரன், அன்றுமட்டுமல்ல, அதன் பின்பும் அவர் முன்னின்று உழைத்தார்.

எம்.பி. திரு. வே. யோகேஸ்வரன் கூறியதாவது:-

'இக்கடைகளைக்கட்ட ஆணையாளர் திரு. வெஞ்சுனம் பெரும் பங்கெடுத்தார். எல்லாவேலை கஷ்டத்தின் மத்தியில் இது கட்டப்பட்டது. மரங்களுக்குத் தட்டுப்பாடு இருந்தது. கட்டடச் சாமான்களை பெறமுடியாமலிருந்தது. அப்படியிருந்தும், இக்கட்டடம் சீக்கிரம் கட்டிமுடிக்கப்பட்டது.

வர்த்தகர்கள் நேர்மையாக உழைக்கவேண்டும்

வர்த்தகர்கள் நேர்மையான முறையில் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

இக்கட்டடத்தை உருவாக்குவதுபற்றி தமிழ்-முஸ்லிம் வர்த்தகர்கள் ஒன்றுசேர்ந்து பல தடவை என்னைவந்து சந்தித்தனர். இந்த இணைப்பு ஒற்றுமை என்றும் வளரவேண்டும். இந்தஒற்றுமை முன்னேற்றத்திற்கு அவசியம்.

ஆணையாளர் ஜனாப் கே. எம். எம். ஹமீட் பேசுகையில் கூறியதாவது:-

"இக்கட்டிடத்தை அமைக்க யாழ்ப்பாண எம். பி. திரு. யோகேஸ்வரன் பலவிதத்திலும் உதவி செய்துள்ளார். பல கஷ்டங்கள் மத்தியில், இச்சட்டபூர்வமான இடைஞ்சல்களை ஓரளவு நீக்கி, பிரதமருடன் தொடர்புகொண்டு, தேவையானவற்றைச் செய்து தந்துள்ளார்.

திரு. மகுரீ கௌலாகு இக்கடைகள் அமைக்கும் விஷயத்தில், பல தடவை உதவிபுரிந்து எங்களை அமைச்சரிடம் நேரில் அழைத்துச் சென்று உதவி செய்தார். யாழ். முஸ்லிம் வாலிபர் சங்கத்தினரும், பல உதவிகளைச் செய்தனர்.

ஆணையாளர் திரு. வெஞ்சுனம் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். நேர்மை தவறாதவர். அவருக்கு டெண்டரில் கடைகளைவிடவேண்டிய அவசியமில்லை. நேரடியாகவே கொடுத்த மற்றவர்களைப்போல் நடந்திருக்கலாம். ஆனால் அவர் நேர்மையுடன் நடந்தார். ரெண்டர் முறைதான் சரி என்பது அவர் கருத்து"

(வ-ச)

ஜனோகரா (வசந்தமாளிகை)
தினசரி 4 காட்சிகள்
திலிப்குமார் • வைஜந்திமாலா
பாட்டாளியின் சபதம்

தேசியஅரசுப்பேரவையில் இடம்பெற்ற விவாதம் பற்றிய செய்திகள் இங்குஇடம் பெறுகின்றன. இவை பேரவையில் தணிக்கைக்குமுன் அங்கீகாரம் பெற்றவை. எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேரவையில் நிகழ்த்திய உரையின் ஒருபகுதி, கடந்த சனிக்கிழமை "எழுநாடு" பத்திரிகையில் வெளிவந்தது வாசகர்கள் தெரிந்ததே பேரவையில் எம். பிக்கள் நிகழ்த்திய உரைகள் இங்கு தொடர்ந்துவரும்.

பொலிஸ் விசாரணை

அனைத்தும் கொலைகள் மூலம் முறியடிக்கப்படுகின்றன

— நீதி அமைச்சர்

(கொழும்பு)

"சட்டங்களைப் பயன்படுத்தி அப்பாவி மக்களைச் சிரமங்களுக்கு உள்ளாக்கக் கூடாது என்றும், விசாரணைகள் அனைத்தும் மனிதாபிமானத்துடன் செய்யப்படவேண்டும் என்றும் அதிகாரிகளைக் கேட்டுள்ளோம்."

கடந்த வியாழக்கிழமை தேசிய அரசுப் பேரவையில் ஒத்திவைப்புப் பிரேரணையின் போது எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் கேட்ட கேள்விகளுக்கு பாதுகாப்பு அமைச்சரால் அளிக்கப்பட்ட பதிலைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தில் நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

'வடபகுதியில் வன்செயல்களும், ஆயுதக் கொள்ளைகளும் அதிகரித்து வருகின்றன. இவற்றின்மீது பொலிஸார் சென்று வரும் விசாரணைகளும் கொலைகள் மூலம் முறியடிக்கப்படுகின்றன. நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியது அரசின் கடமை.

"அவசரகாலச் சட்டத்தை விரட்டனப்படுத்துவதை எமது அரசாங்கம் விரும்பவில்லை. அதனைத் தவிர்ப்பதற்காகவே புதிய இரு சட்டங்களைக் கொண்டு வந்தோம்.

'தமிழ்ஈழ விடுதலைப் புலிகளுக்கும், அவற்றைப் போன்ற வேறு அமைப்புகளுக்கும் தடை விதிக்கும் சட்டம், சந்தேக நபர்களுக்கு பிணை மறுப்பதற்கான, குற்றவியல் நடவடிக்கை நிறப்புமுறை ஏற்பாடுகள் சட்டம் ஆகியவற்றைக் கொண்டு வந்தோம். இவற்றை நாம் கொண்டு வந்த தன்காரணம், வடபகுதியில் மரணத்தில் முடியும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தவேயாகும்.

"வேறு அரசியல் காரணங்கள் எதற்காகவும் கொண்டு வரவில்லை. அதனால் தான் இச் சட்டங்கள் அமுலில் இருக்கும் கால எல்லையைக்கூட ஒரு வருடமாக வரையறை செய்துள்ளோம்.

"நான் சமீபத்தில் வடபகுதிக்குச் சென்றேன். அங்கு பொலிஸ் உயர் அதிகாரிகளையும், இராணுவ உயர் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினேன். அவர்களிடம் நான் இரு சட்டங்களின் கீழ் விசாரணைகள் நேர்மையான முறையில் நான் நடைபெறுகின்றன என்றும், பெண்கள் எவரும் சோதனைகளுக்கு உட்படுத்தப்படவில்லை என்றும் தெரிவித்தார்கள்.

"பிரதிநிதிகள் சட்டங்களைப் பயன்படுத்தி அப்பாவி மக்களைச் சிரமங்களுக்குஉள்ளாக்கக் கூடாது என்றும், விசாரணைகள் அனைத்தும் மனிதாபிமானத்துடன் செய்யப்படவேண்டுமெனவும் நான் அந்த அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டேன்.

"வடபகுதி வன்செயல்கள் சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கைதிகளாக வைக்கப்பட்டிருப்பவர்களையும் கண்ணியமான முறையில் விசாரணை செய்யவேண்டுமெனவும், அவர்கள் எவரையும் கொடுமைப்படுத்தி விசாரணைகள் மேற்கொள்ளப்படக்கூடாதென்றும் ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு ஒன்றை பொலிஸ், இராணுவப்படைகளுக்கு பிறப்பித்துள்ளார்".

இவ்வாறு அமைச்சர் தேவநாயகம் கூறினார்.

"சித்திரவதைக்குள்ளாகும் இளைஞர்கள்: கடந்த அரசு மாதிரியே இந்த அரசும் நடக்கிறது'

பேரவையில் 'அமிர்' எழுப்பிய 3 விஷயங்கள்

(கொழும்பு)

இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வலந்த சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். கடந்த அரசாங்கம் செய்த மாதிரியே. இந்த அரசாங்கமும் இளைஞர்களைச் சித்திரவதை செய்கிறது.

விசாரணை நடத்துவதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் 'சைவப்படுபவர்கள் துன்புறுத்தப்படுவதைத் தான் நாம் ஆட்சேபிக்கிறோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தேசிய அரசுப்பேரவையில் பேசுகையில் தெரிவித்தார்.

தேசிய அரசுப் பேரவை 8ம் தேதி பி. ப 2 மணிக்கு சபாநாயகர் திரு. ஆனந்த தில்ஸடி ஆல்விஸ் தலைமையில் கூடியது.

பேரவையில் ஒத்திவைப்பு பிரேரணை வேளையில்போது எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மூன்று விடயங்கள் குறித்து கேள்வி எழுப்பினார்.

முதலில் ஜெயக்குமார் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டது பற்றி அவர் பேசுகையில்

ஜெயக்குமாரின் சத்தியக் கடதாசி ஒன்றில் போட்டோ கிடைக்கப் பிரதியை சபையில் காட்டி அதனை வாசித்தார்.

அந்த சத்தியக் கடதாசியிலிருந்து அவர் வாசித்ததாவது; 10-5-78ல் காலை 10 மணிக்கு ஜெயக்குமார் இன்னும் 11 பேருடன் கைது செய்யப்பட்டார். அக்கோ கேட்டிலுள்ள பண்ணையிலிருந்தும் இன்னொரு பண்ணையிலிருந்தும் பொலிசாரும் இராணுவத்தினரும் இவர்களைக் கைது செய்தனர். வவுனியாவில் நான்கு ஜீப்பில் இரண்டு பண்ணைகளுக்கு உள்ளன.

"இராணுவத்தினரும் பொலிசாரும் ஜெயக்குமாரை தாக்கினர். பட்டன் போல்வால் அடித்தனர். பண்ணையிலிருந்த வீட்டை இராணுவத்தினரும் பொலிசாரும் உடைத்தனர்.

வவுனியாவில் உள்ள பொலிஸ் தலைமையகத்துக்கு இவர்கள் கொண்டு வரப்பட்டனர். அங்கு ஜெயக்குமாரின் ஆடைகளைக் கழற்றி அவரை நிர்வாண கோலமாக்கினர். அதன்பின் பெல்ட் பட்டியால் அவரை அடித்தனர் அவரது தலையிலும் உடலிலும் தாக்கி அறையில் போட்டு பூட்டினர்

"மறுநாள் விடியல் 5-30 மணிக்கு ஜெயக்குமார் மற்றவர்களுடன் வவுனியா நீதவானிடம் கொண்டு செல்லப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். எனினும் இவர்கள் நீதவான் முன்னிலையில் நேராக ஆஜர் செய்யப்படவில்லை.

'அனுராதபுரம் விளக்கமறியல் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு ஜெயக்குமார் தாக்கப்பட்டார்.

"ஜெயக்குமாரை தாக்கிய பொலிஸ், இராணுவத்தினர் யார் யார் என்று தெரியாது.

"ஜெயக்குமார் போன்றே ஏனைய 11 பேரும் சித்திரவதை செய்யப்பட்டனர்.

'ஏனைய 11 பேரதும் பெயர்கள் வருமாறு: போல் ஜஸ்டீன் கொழும்பு-13, கே. ஏ. யாழ நடராசா கல்லூரி, வேலுத்தநாயகம் தரவெட்டி, மகிழூட் ஏ. எம். நியாகரநாதர் குருமன்காடு, வவுனியா வீரசிங்கம் ஞானசேகரம்.

அச்சுவேலி இராஜேந்திரம், கொழும்பு 4 எம். கைலாசநாதன், யாழ்ப்பாணம் கு. எம். பவானந்தன், யாழ்ப்பாணம் எஸ். ரவீந்திரன், யாழ்ப்பாணம் பி. ராஜசேன், வவுனியா வே. ஜெயரட்னம் வவுனியா, இவ்வாறு சத்தியக்கடதாசியிலிருந்து திரு. அ. அமிர்தலிங்கம் வாசித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசியதாவது;

இவர்களின் விடுவிக்கை ஜனாதிபதியினதும் பிரதமரதும் கவனத்துக்கு கொண்டு வரமாறு இவர்களது வழக்கறிஞர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஜெயக்குமார் ஒரு தகுதி பெற்ற பொறியியலாளர். இவர் இப்போது வவுனியாவில் விவசாயம் செய்து வருகிறார்.

ஜெயக்குமாரின் சகோதரர் ஒரு பாதிரியாரான வண. பிதா செல்வரட்னம் ஆவார்.

"இந்த பண்ணையின் சொந்தக்காரர் அருளப்பு அவர் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர். அவருக்கு வன்செயல்களில் தொடர்பு இருக்கும் என்று நினைக்க முடியாது.

'இதன் பின்னரும் இந்த மாதிரி நடக்கக் கூடாது என்பதால் இதை சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

"பொலிசார் கைது செய்யும் இளைஞர்களை அடித்துகாயப்படுத்திவிட்டு பின்னர் அவர்களிடம் காயம் ஆறும் மட்டும் தடைத்துவைத்திருக்கிறார்கள். காயம் ஆறியபின் வெளியே விடுகிறார்கள்.

"பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் கைது செய்யப்பட்ட ஒன்னுமொருவர் மன்னாருக்கு விசாரணைக்கு கொண்டு செல்லப் பட்டார். அவர்பெயர் பரமநாதன்.

"விசாரணை நடத்துவதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் அவர்கள் துன்புறுத்தப்படுவதைத்தான் நாம் ஆட்சேபிக்கிறோம்.

"பரமநாதனை நெருப்பில் "ரோஸ்ட்" செய்து எடுத்திருக்கிறார்கள். அவரது இரண்டு கைகளையும் ஒரு மரத்திலும், இரண்டு கால்களையும் இன்னொரு மரத்திலுமாக கட்டிப் போட்டு கீழே நெருப்புச்சட்டி வைத்து கொடுமைப்படுத்தி விடுகிறார்கள்.

"அவ்வாறு மரத்தில் கட்டிப் போட்டுவிட்டு கீழே நெருப்பு வைத்திருக்கிறார்கள். நெருப்பு வைத்துவிட்டு பொலிசார் அங்கிருந்து சென்றுவிட்டனர். பரமநாதன் அவலிதையில் கத்திய பின்புதான் பொலிசார் அங்கு வந்து நெருப்பை அணைத்தார்கள்

(தொடரும்)

வளாகங்கள் —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகும். பல்கலைக் கழக உப வேந்தர் திரு. பி. பி. ஜீ. எல். ஸ்ரீவர்த்தன இதுபற்றி சில வளாகத் தலைவர்களும் அறிவித்துள்ளார். ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதமுதல் திங்கட்கிழமையே வளாகங்கள் ஆரம்பமாகும். அதன்படி இவ்வருடம் அக்டோபர் 8-ம் திகதி முதல் சில புதிய மாணவர்களுக்கு ஆண்டு விரிவுரைகள் ஆரம்பமாகும். "பொல்கொல்லையில் 675 கலைமாணவர்கள் இவ்வருடம் அனுமதிக்கப்பட்டு அங்கும் அக்டோபரிலேயே விரிவுரைகள் ஆரம்பமாகும்.

நூலக வசதிகள், பொது அறைவசதிகள் போன்றவைப் அங்கு ஏற்பாடு செய்யப்படும்.' என்றும் திரு. கனகே குறிப்பிட்டார். [ச]

இன்று

(யாழ்ப்பாணம்)

எழுத, பேசத் தெரியாத சிறைக் கைதிகளுக்கு கல்வியறிவூட்டும் வகையில் இந்நாளை யாழ். சிறைச்சாலையில் புதிய வகுப்புகள் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன. இவ்வகுப்புகளை சர்வதேச பொதுக்தாபனமான "வேல்ட் இன்டரநாஷனல் விசன்" நிதியனம், யாழ் லை. எம். சி. ஏ. நிதியனத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வையவத்தில் யாழ் மாவட்ட நீதிபதி திரு. ஜே. ஜீ. ஆசீர்வாதம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். [செ]

புனித...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் நடைபெற்றது. நாளை மீண்டும் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் வடபகுதி எம் பிக்கள் கலந்து 'கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1980 முதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலும் இருக்கவேண்டுமென்று ஷேக் அப்துல்லா கருதுகிறார். இதனை தமிழ்நாட்டு மக்கள் ஏற்கமாட்டார்கள்" என்றும் முதல்வர் கூறினார்.

கஞ்சா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தபோது நீதவான் அவருக்கு 250 ரூபா அபராதம் விதித்தார். [அ]

கைலாசநாதக் குருக்களுக்கு சைவ மக்கள் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

"வேதாகமங்களிலே தேர்ந்த வேதியர்களிலுமேலே உலகத்தோடு ஒன்றி உண்டென்று உணர்ந்தோர் உரைப்பர். எல்லா உயிர்களுக்கும் செந்தண்மையோடு கருணை காட்டும் அந்தணர்கள் மக்கள் வாழ்க்கைக்குரிய வடவுள் வழிபாட்டுமுறைகளைக் காட்டுவார்கள்".

புங்குடுதீவு வெங்கோவிலில் மலேசியாவிற்குச் சென்று அங்குள்ள சுப்பிரமணியசுவாமி கோவிலுக்குக் கும்பாபிஷேகம் செய்துவிட்டுத் திரும்பிய வெழுஜ. கைலாசநாதக்குருக்களுக்கு அளிக்கப்பட்ட பாராட்டுவிழாவில் பேராசிரியர் கி. இ. சதாசிவம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார். வெழுஜ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் தலைமையில் நடந்த இவ்விழாவில் பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில், "இலங்கையிலுள்ள முக்கிய தேவஸ்தானங்களுக்கும், இந்தியாவிலுள்ள கோவில்களுக்கும் நாம் பாலிஷேகம் செய்து பெருமையைத்தரவல்ல கைலாசநாதக் குருக்கள் மலேசியாவுக்கும் அழைக்கப்பட்டு அங்கும் பிரதான குருக்களாகத் திகழ்ந்து சிறப்புற கும்பாபிஷேகத்தை நிகழ்த்தியமை நமக்குப் பெருமை தருகிறது" என்றார்.

புலவர்சமூகத்துச்சொன்னதன் பேசும்போது கூறியதாவது; "குருவிடம் சமயம் என்கின்ற மூன்று அம்சங்களில் குருவே முதன்மையாகக் கணிக்கப்படுகின்றார். குருவே விக்கிரகத்தை விளங்கவைத்துச் சமயத்தைத் திருஷ்டிப்பவர். இந்த வழியில் நமது கைலாசகுரு தரமான சாக்திர விற்பன்னராய் விளங்கி பல வேதியர்களை உருவாக்கியும் வழிபாட்டுமுறைகளை தெளிவவைத்தும் வருகின்றார்.

"புங்குடுதீவிலே பெருங்கோவில் கோவிலில்ல முப்பத்து மூன்று குண்டங்களோடு கூடிய கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடத்தியவர் மலேசியாவிற்குச் சென்று கும்பாபிஷேகத்தை நிகழ்த்தியமை அங்குள்ள சைவப் பெருமக்களுக்குப் பெரும் பாக்கியமாய் அமைந்ததென்று அங்குள்ள 'தமிழ் நேசன்' முதலிய தமிழ் பத்திரிகைகளும் ஆக்கில ஏடுகளும் செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது."

குருக்களுடைய இல்லத்திலிருந்து வரவைப் பெருமக்கள் அவரை மங்கள வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்து வந்து சிராஞ்சீவிபதிக் கந்தசுவாமி கோவிலில் விசேஷ மரியாதைகளை வழங்கி கோவிலிலுள்ள விழாமண்டபத்திற்குச் சென்றார்கள். ருசமை திரு. நா. சண்முகம் குருக்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

விருந்துவாக் பொன். அ. வரசலை, நி. சதாசிவம், நாகலிங்கசாமி. இ. மாணிக்கம், ஐ. நாரைத்தினம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். (அ)

இடமாற்றம்

(அரசாங்கம்)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் நிர்வாகச் செயலாளராக திரு பி. செல்வரத்தினம் குருநாகல் அரசினர் வைத்தியசாலையிலிருந்து இடமாற்றம் பெற்று வந்துள்ளார். பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மேற்படி பதவி நீண்ட நாட்களாக காலியாயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை 'எழுநாடு' லிமிட்டெட் சுதந்தரவளத்தரால் யாழ்ப்பாணம் வெங்கோவில் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49. Jaffna. Telegram; Eelanaadu. Telephone: 389. Registered as a Newspaper in Sri lanka.